பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

20 12 2025 SATURDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று மேற்குவங்க மாநிலத்தில் 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

2. கடந்த 11 ஆண்டுகளில் நாடுமுழுவதும் உள்கட்டமைப்பு வசதிகள் மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள் அடுத்த மாதம் 18ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

4. விவசாயிகளுக்கான தட்கல் மின் இணைப்பு திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கான காலஅவகாசத்தை இம்மாதம் 31ஆம் தேதிவரை நீட்டித்து மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

5. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி ட்வெண்டி ட்வெண்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 30 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று மேற்குவங்க மாநிலத்தில் 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

நாடியா மாவட்டத்தில், ரணாக்கட் பகுதியில் நடைபெறும் விழாவில் நிறைவுற்ற பணிகளையும் அவர் தொடங்கி வைத்து உரையாற்றவுள்ளார்.

இம்மாநிலத்தில் வடக்கு 24 பர்கானா மாவட்டத்தில், பாராசாத் முதல் பாராஜாகுலி வரையிலான 17 மீட்டர் தூரத்திற்கு நான்கு வழிச்சாலை அமைக்கும் திட்டத்திற்கு அவர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

பாராஜாகுலி முதல் கிருஷ்ணா நகர் வரை சுமார் 66 கிலோமீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ள நான்கு வழிச் சாலையையும் பிரதமர் திறந்து வைக்கிறார்.

கொல்கத்தா மற்றும் சிலிகுரி நகரங்களை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த சாலைத் திட்டங்கள், பயண நேரத்தை சுமார் 2 மணி நேரம் வரை குறைக்கும் என்று தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது.

**>>>>>><<<<<<**

கடந்த 11 ஆண்டுகளில் நாடுமுழுவதும் உள்கட்டமைப்பு வசதிகள் மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற ரியல் எஸ்ட்டேட் தொடர்பான தேசிய மாநாட்டில் பேசிய அவர், தேசிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், பாரத்மாலா, சாகர்மாலா போன்ற மத்திய அரசின் முதன்மைத் திட்டங்கள், நகர்ப்புற மேம்பாட்டை பெருமளவில் வலுப்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் அனைத்தும், நாட்டை உலக அளவில் மிகச் சிறந்த உள்கட்டமைப்புகளை கொண்ட நாடுகளின் பட்டியலில் முன்னணியில் இடம்பெறச் செய்ய உதவும் என்று அமைச்சர் கூறினார்.

அரசின் திட்டங்கள் வெறும் அறிவிப்புகளாக இல்லாமல், செயல்வடிவம் பெற்று சாதகமான மாற்றங்களை உருவாக்கியுள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள் அடுத்த மாதம் 18ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரைவு வாக்காளர் பட்டியல், அனைத்து வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் சிறப்பு முகாகளில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படும் என்று கூறினார்.

www.elections.tn.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது என்றும் இதை பொதுமக்கள், தங்களது பெயர் மற்றும் குடும்பத்தில் உள்ளவர்களின் பெயர்களை சரிபார்த்துக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பட்டியலின் அடிப்படையில் தகுதியுள்ள வாக்காளர்களை புதிதாக சேர்க்க, தகுதியற்ற வாக்காளர்களை நீக்க அரசியல் கட்சிகள் தங்களது ஆட்சேபனைகளை அடுத்த மாதம் 18ஆம் தேதிவரை தெரிவிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாதவர்கள், அடுத்த மாதம் ஒன்றாம் தேதி 18 வயது பூர்த்தி அடைபவர்கள், படிவம் 6-ஐ நிரப்பி வழங்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

தொகுதியிலேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடி பெயர்ந்தவர்களும் மற்றும் வேறு தொகுதிக்கு இடம் பெயர்ந்தவர்களும் படிவம் 8-ஐ பூர்த்தி செய்து, அதற்கான ஆவணங்களின் நகல்களுடன் சமர்ப்பிக்க வேண்டும் என்றுதிருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறினார்.

>>>>>><<<<<<

விவசாயிகளுக்கான தட்கல் மின் இணைப்பு திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கான காலஅவகாசத்தை இம்மாதம் 31ஆம் தேதிவரை நீட்டித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகளிடமிருந்து வந்த கோரிக்கையை அடுத்து, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த காலக்கெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் முறையாக பரிசீலிக்கப்பட்டு, அரசின் வழிகாட்டுதலின் படி, மின் இணைப்புகள் வழங்கப்படும் என்றும் மாநில அரசு கூறியுள்ளது.

எனவே, விருப்பமுள்ள விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி. இம்மாதம் 31ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

தமிழகத்தில் தகுதியான வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்து, முழுமையான வாக்குப்பதிவுக்கு வழிவகுப்போம் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 18 வயது பூர்த்தியடைந்த அனைவரும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதை தமது கட்சித் தொண்டர்கள் சரிபார்ப்பார்கள் என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, விழுப்புரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய திரு. நயினார் நாகேந்திரன், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை தேர்தல் ஆணையம் முறையாக செய்துள்ள போதிலும், அதனை திமுக எதிர்ப்பது ஏன் என்றும் கேள்வி எழுப்பினார்.

>>>>>><<<<<<

மாநிலத்தில் அத்தியாவசிய தேவைகளுக்கு கூட போராட்டம் நடத்த வேண்டிய நிலை உள்ளதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் கூறியுள்ளார்.

தருமபுரியில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், குடிநீர், சாலை வசதி, வீட்டுமனைப் பட்டா ஆகியவற்றுக்காக மாநிலத்தில் போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

காவிரி உபரிநீர் திட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசு முன்முயற்சி எடுக்க வேண்டும் என்றும் திரு. சண்முகம் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

சென்னை மெரினா கடற்கரையில் கடைகளை ஒதுக்குவது தொடர்பாக, உயர்நீதிமன்ற நீதிபதிகள் நாளை மறுநாள் நேரில் ஆய்வு செய்யவுள்ளனர்.

கடைகளை முறையாக ஒதுக்கீடு செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு வந்த போது, இதுதொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், கடைகள் தொடர்பான வரைபடங்களையும் மாநகராட்சி ஆணையர் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலர் அறிக்கையாக தாக்கல் செய்தனர்.

வரைபடத்தை ஆய்வு செய்த நீதிபதிகள், கடைகளுக்கான சரியான இடங்கள் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்று கூறி, கடைகள் அமையவுள்ள பகுதியில் நாளை மறுநாள் நேரில் ஆய்வு செய்யவுள்ளதாக தெரிவித்தனர்.

இந்த ஆய்வில், சென்னை மாவட்ட ஆட்சியர், மாநகர காவல்துறை ஆணையர், வருவாய்த்துறை மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொள்ள வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

>>>>>><<<<<<

மத்திய அரசின் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ், நாடுமுழுவதும் ஏராளமான இளம் வீரர் மற்றும் வீராங்கனைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விளையாட்டுத்துறையில் மகளிரை ஊக்குவிக்கும் வகையில் அஸ்மிதா விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக சேலத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில், இளம் பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டிகளில் பங்கேற்பதன் மூலம், தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளுக்கு செல்லும் வாய்ப்பு கிடைக்கும் என்று இளம் தடகள வீராங்கனைகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட – வீராங்கனைகள் 45 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

சிரியாவில் அமெரிக்க ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

பங்களாதேஷில் அண்மையில் நிகழ்ந்த வன்முறைகள், வரும் பொதுத்தேர்தலை சீர்குலைக்க நடத்தப்பட்டுள்ள சதி என்று பங்களாதேஷ் தேசிய கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

>>>>>><<<<<<

ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்ற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர், நேற்று புதுதில்லியில் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேசினர்.

>>>>>><<<<<<

புதுதில்லியில் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ள சர்வதேச செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாடு தொடர்பான முன்னோட்ட நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

நாமக்கல் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், காலநிலை மாற்றம் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பசுமைப் பள்ளிகளை ஆதிதிராவிடர் நல அமைச்சர் திரு. மதிவேந்தன் நேற்று திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

காஞ்சிபுரத்தில் மாவட்ட அளவிலான புத்தகத் திருவிழாவை அமைச்சர் திரு. காந்தி நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

ராணிப்பேட்டையில் நேற்று நடைபெற்ற மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில், 47 பயனாளிகளுக்கு 5 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடனுதவி வழங்கப்பட்டது.

>>>>>><<<<<<

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு, வரும் 24ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

வைகுண்ட ஏகாதசி திருவிழாவை ஒட்டி, ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவிலில், புறக்காவல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்தி

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி ட்வென்டி ட்வென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 30 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 231 ரன் எடுத்தது.

232 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்கா, 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 201 ரன் எடுத்தது.

வருண் சக்கரவர்த்தி 4 விக்கெட்டுகளையும், ஜஸ்ப்ரீத் பும்ரா 2 விக்கெட்டுகளையும், ஹர்ஸ்தீப் சிங், ஹர்டிக் பாண்டியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

>>>>>>END<<<<<<